# 100 உள்ளூர் சிறு தொழில்முனைவோருக்கு ஏயோன் நிறுவனம் உதவி

கோலாலம்பூர், ஆக. 5–
இந்த ஆண்டு மலேசிய தகவல் தொடர்பு மற்றும் மல்டிமீடியா கமிஷனுடன் (MCMC) இணைந்து Pupuk@AEON எனும் முன்முயற்சி மூலம் மொத்தம் 100 உள்ளூர் சிறு தொழில்முனைவோர்களுக்கு ஏயோன் நிறுவனம் தனது உதவியைச் செய்து வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

ஏயோன் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி ஷஃபி ஷம்சுதீன் கூறுகையில், “Pupuk@AEON எனும் முன்முயற்சியின் கீழ் உள்ளூர் சிறு வணிகர்களுக்கு பயனுள்ள, முறையான மற்றும் போட்டிமிக்க ஆன்லைன் சந்தைப்படுத்தலை ஆதரிக்க முறையான டிஜிட்டல் மயமாக்கல் முறைகளை வழங்குவதன் மூலம் மைக்ரோ நிறுவனங்களை மேம்படுத்துவதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம்” என்றார்.

சம்பந்தப்பட்ட சிறு நிறுவனங்களுக்கு வணிக மேம்பாட்டு வாய்ப்புகளை வழங்குவதற்கு தற்போதுள்ள சுற்றுச்சூழல் அமைப்பை ஏயோன் நிறுவனம் திறக்கும் என்று அவர் மேலும் கூறினார்.

“இந்த வாய்ப்புகளில் ஏயோன் நிறுவனத்தின் விற்பனை பொருட்கள், சேவைகள், இயற்பியல், டிஜிட்டல் கடைகள், ஏயோன் நிறுவனத்தின் தளவாட நெட்வொர்க் மற்றும் தகவல் தொடர்பு சேனல்கள் மற்றும் ஏயோன் நிறுவனத்தின் கடன் சேவை மூலம் நிதி சேவைகள் ஆகியவை அடங்கும்.

“Pupuk@AEON எனும் முன்முயற்சியின் மூலம் சிறு தொழில்முனைவோர் மேம்பாட்டு செயல்முறை ஐந்து ஆண்டுகள் நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த சிறு தொழில்முனைவோரை மேம்படுத்துவதற்கான முயற்சியில் SKMM உடன் ஒத்துழைக்கும் வாய்ப்பிற்கு ஏயோன் நிறுவனம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டுள்ளது.







“தொடக்கத்தில், இந்த சிறு தொழில்முனைவோர்கள் உள்ளூர் சந்தையை பூர்த்தி செய்ய சிறந்த தயாரிப்புகளை உருவாக்க நாங்கள் உதவுவோம். இந்த தயாரிப்புகளை ஏயோன் நிறுவனத்தின் அகப்பக்கத்திலேயே விற்பனையை செய்யவும் ஏற்றுமதி செய்யவும் நாங்கள் வழிகாட்டுவோம்” என்று Pupuk@AEON எனும் பிரசாரம் தொடங்கப்பட்ட பிறகு ஒரு மெய்நிகர் செய்தியாளர் கூட்டத்தில் அவர் இவ்வாறு கூறினார். இந்த கூட்டத்தில் எஸ்.கே.எம்.எம் தலைவர் டாக்டர் ஃபத்லுல்லா சுஹைமி அப்துல் மாலெக் உடனிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.


“நாங்கள் ஷோஃபி நிறுவனத்துடன் கூட்டு சேர்வதன் மூலம் சம்பந்தப்பட்ட சிறு தொழில்முனைவோரின் வருமான ஆதாரங்களுக்கு ஊக்கத்தை அளிப்பது மட்டுமல்லாமல், பரந்த சந்தையில் போட்டியிட அவர்களின் போட்டித்தன்மையை வலுப்படுத்தவும் நாங்கள் முயற்சிக்கின்றோம்.

“Pupuk@AEON எனும் திட்டமானது சிறு வணிகர்களின் தொழிலை வளர்ச்சி அடைய செய்வதோடு அவர்களின் பொருளாதாரத்தையும் உயர்த்தும். அதுமட்டுமின்றி, இத்திட்டமானது வேலைவாய்ப்புகளை உருவாக்கும் மற்றும் உள்ளூர் சமூகத்தின் வருமானத்தையும் அதிகரிக்கும் என்று அவர் இந்த சவாலான காலத்தில் சிறு வணிகர்களுக்கு நம்பிக்கை தெரிவித்தார்.

இதற்கிடையில், ஏயோன் நிறுவனத்துடன் இணைந்து தேர்ந்தெடுக்கப்பட்ட PIKக்கள் வழங்கிய உதவிகள் மூலம், இந்த சிறு தொழில்முனைவோருக்கு ஏயோன் நிறுவனம் சூப்பர் மார்க்கெட் இடத்தில் வியாபாரம் நடத்துவதற்கான மார்க்கெட்டிங் மற்றும் பேக்கேஜிங் உத்திகள் போன்ற வழிகாட்டுதல்களை வழங்கி வருகின்றது.

“இது போன்ற முயற்சிகள் 2025க்குள் 800,000 சிறு தொழில்முனைவோருக்கு உதவும் சிறு தொழில்முனைவோர் டிஜிட்டல் மயமாக்கல் திட்டத்தில் (Pupuk) அரசாங்கத்தின் நோக்கத்திற்கு உதவ முடியும்“ என்று அவர் மேலும் கூறினார்.

## கேமரன் மலையில் பனிச்சறுக்குடன் புதிய பொழுது போக்கு பூங்கா





கோலாலம்பூர், ஆக. 5–
இதமான குளிர் காற்று, காய்கறிகள், ஸ்ட்ராபெரி (Strawberry ) பழங்கள் ஆகியவற்றுக்காக, மக்கள் மத்தியில் பிரபலமான ,கேமரன் மலையில், புதிய சுற்றுலா ஈர்ப்பாக theme park எனப்படும் பொழுதுபோக்கு பூங்கா சேர்க்கப்படவுள்ளது.

60 ஏக்கர் நிலப்பரப்பு பகுதியில், பனிச்சறுக்கு சரிவுடன் மேலும் சில சவால் நிறைந்த பொழுது போக்கு விளையாட்டுகளை உட்படுத்தியிருக்கும் அந்த பூங்காவை, 2023–ஆம் ஆண்டு முற்பகுதியில் திறக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மலைப்பகுதியில் அமைக்கப்படும் அந்த பொழுது போக்கு பூங்கா திட்டம், இயற்கையைப் பாதிக்காத வகையில் மேற்கொள்ளப்படுமென, அத்திட்ட மேம்பாட்டு நிறுவனமான Sim Leisure குழுமம் தெரிவித்துள்ளது.





## ஆன்லைனில் ஜிஎம் கிளாங் உணவு சேவை

GM KLANG

கோலாலம்பூர், ஆக. 5–
ஜூலை 28 ஆம் தேதி ஜிஎம் கிளாங் அதன் சில விற்பனை மையத்தில் ஆன்லைன் உணவு சேவையைத் தொடங்கியுள்ளது என்று அண்மையில் ஓர் அறிக்கையில் அறிவித்துள்ளது. அதனைத் தொடர்ந்து, அதன் அனைத்து விற்பனை மையங்களிலும் கியூஆர் குறியீடுகளை ஸ்கேன் செய்வதன் மூதல் ஜிஎம் கிளாங் தயாரிப்புகளை வாங்கி ருசிக்க முடியும் என்று நேற்று ஓர் அறிக்கையில் அறிவித்துள்ளது.

ஜிஎம் கிளாங் நிறுவனத்தின் பொது உறவுகள் மற்றும் பெருநிறுவன தகவல் தொடர்பு பிரிவின் மேலாளர் நார்சுஹைதா ஒத்மான் கூறுகையில், சமூகத்தளங்களின் மூலம் தொடங்கப்பட்ட ‘Click, Order & Pick-Up (COP)’ சேவையானது தேசிய மீட்பு திட்டத்தின் (பிபிஎன்) முதல் கட்டத்திற்கு ஏற்ப பாதுகாப்பான முறையில் மேற்கொள்ளப்படும் உணவுச் சேவையாகும் என்றார்.

“இத்திட்டத்தின் மூலம் பொதுமக்கள் தங்கள் உணவை வாங்க வரிசையில் நிற்க வேண்டியதில்லை. அவர்களின் ஆர்டரைப் பெற அவர்கள் தங்கள் வாகனத்தை விட்டு வெளியேறவும் வேண்டியதில்லை” என்று அவர் கூறினார்.

இந்த சேவை தினமும் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை கிடைக்கும் என்றும், ஜிஎம் கிள்ளாங் நிறுவனத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட விற்பனை மையங்களில் கொரியன் முதல் மேற்கத்திய மற்றும் உள்ளூர் உணவு வரை அனைத்தையும் வழங்லாம் என்றும் அவர் கூறினார்.

GM Klang இணையதளத்தில் கிளிக் செய்வதன் மூலமோ அல்லது QR குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலமோ, தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் ஆர்டர் செய்து பொதுமக்கள் தங்கள் உணவைப் பெறலாம்.




மேல்தகவலுக்கு, பொதுமக்கள் https://gmklang.com/event_details/view/item_id/153.html எனும் அகப்பக்கத்தைப் பார்வையிடவும்.

## வெட்டுமரத் தொழில் துறை ஒரு நாளைக்கு 60 மில்லியன் ரிங்கிட் வருமானத்தை இழந்துள்ளது

பந்திங், ஆக. 5–
தேசிய மீட்புத் திட்டத்தை (பிபிஎன்) அமல்படுத்திய பிறகு இரண்டு மாதங்களுக்கு செயல்பட முடியாததால், வெட்டுமரத் தொழில் துறை ஒரு நாளைக்கு சுமார் 60 மில்லியன் ரிங்கிட் இழப்பைப் பதிவு செய்யும் என்று பெருந்தோட்ட நிறுவனங்கள் மற்றும் பொருட்கள் அமைச்சகம் (KPPK) மதிப்பிடுகிறது.

பெருந்தோட்ட நிறுவனங்கள் மற்றும் பொருட்கள் அமைச்சகத்தின் அமைச்சர், டத்தோ டாக்டர் முகமது கைருதீன் அமான் ரசாலி கூறுகையில், இழப்பு என்பது தோராயமான மதிப்பீடு மட்டுமே, வாடிக்கையாளர்களுக்கு பொருட்களை வழங்க முடியாததால் இழந்த ஒப்பந்தங்கள் இதில் இல்லை என்று கூறினார்.

“கோவிட்–19 நோய்த்தொற்றை எதிர்க்கொள்ளும் நோக்கத்தில் நடமாட்டக் கட்டுப்பாடு ஆணை அமல்படுத்தினாலும் இது பல வணிகத் துறையை பாதித்துள்ளது” என்று அவர் கூறினார்.

இந்த பாதிப்பை குறைக்கும் வகையில் மரத்துறை அதன் ஊழியர்களுக்கு தடுப்பூசியைப் போட VACOMS எனும் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.





VACOMS திட்டம் குறித்து கருத்து தெரிவித்த முகமட் கைருதீன், சிலாங்கூரைச் சுற்றியுள்ள மர மற்றும் தளவாடங்கள் தொழிலில் உள்ள மொத்த 10,000 தொழிலாளர்களுக்கு இதுவரை தடுப்பூசி போடப்பட்டுள்ளது என்றார். “மதப் பொருள்களின் தேவை மிகவும் அதிகமாக உள்ளது. ஏனெனில், ஆரம்ப கட்டத்தில் நாங்கள் 8,000 கோரிக்கைகளை மட்டுமே எதிர்ப்பார்த்தோம். ஆனால், இந்த சவாலான காலத்தில் மரப்பொருள்களின் தேவை 10,000 கோரிக்கைகளுக்கு மேலாகவே உள்ளது. ஆகவே, இந்த கோரிக்கைகளை பூர்த்தி செய்ய துறையில் உள்ள ஊழியர்கள் விரைவில் தங்கள் தடுப்பூசிகளைப் போட வேண்டும்.

“எனவே, இந்த இலக்கை அடைய வெட்டுமர தொழில் துறை VACOMS எனும் திட்டத்தை அடுத்த செப்டம்பர் தொடக்கத்தில் இயக்க திட்டமிட்டுல்ளது. முதல் தடுப்பூசி ஆகஸ்ட் நடுப்பகுதிவரை போடப்படும். இரண்டாவது டோஸ் செப்டம்பரில் முடிவடையும்என்று எதிர்ப்பார்க்கப்படுகின்றது” என்று அவர் மேலும் கூறினார்.

துறைக்கான இரண்டு –டோஸ் தடுப்பூசி வெற்றிகரமாக இருப்பதால், நாட்டின் வருமானத்திற்காக வெட்டுமரத் தொழில் துறை வேகமாக செயல்பட முடியும் என்று அமைச்சகம் நம்புகிறது.

“பெருந்தோட்டத் துறையில் 80,000 வெளிநாட்டு தொழிலாளர்கள் உள்ளனர். அவர்களுக்கும் விரைவில் தடுப்பூசிகள் போடப்படும் என்று எதிர்ப்பார்க்கப்படுகின்றது” என்று அவர் கூறினார்.

## முடிதிருத்தும் நிலையங்கள் திறப்பதற்கு அனுமதி வழங்குவீர்

கோலாலம்பூர், ஆக. 5–
சிகையலங்கார மற்றும் முடித் திருத்த நிலையங்கள் விரைவாக திறக்கப்பட வேண்டும் என அந்த நிறுவனங்களை நடத்தி வருவோர் கோரிக்கை எழுப்பி வருகின்றனர்.

ஜூன் 1 ஆம் தேதி மூன்றாவது முறையாக நடமாட்டக் கட்டுப்பாடு ஆணை அமல்படுத்தியது முதல் சிகையலங்கார மற்றும் முடித்திருந்த நிலையங்ககள் தொடர்ந்து மூடப்பட்டுள்ளன.

இதனால் வருமானம் இன்றி அந்நிலையங்களை நடத்திவருவோர் பெரும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

சிகையலங்கார மற்றும் முடித்திருத்த நிலையங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாமல் இருப்பதோடு வாடகை செலுத்த முடியாத சூழ்நிலைக்கும் சிகையலங்கார மற்றும் முடித்திருத்த நிலையங்களை நடத்தி வருவோர் உள்ளாகியுள்ளனர்.



இந்த நிலைமை தொடர்ந்தால் நாட்டில் அதிகமான சிகையலங்கார மற்றும் முடித்திருத்த நிலையங்கள் பல மூடுவிழா காணவேண்டியிருக்கும் என்ற அச்சம் எழுந்துள்ளது. தினசரி வருமானத்தை நம்பியிருக்கும் எங்களது நிலையை அரசாங்கம் மனிதாபிமானத்தோடு உணர்ந்து மீண்டும் தொழில் தொடங்குவதற்கு அனுமதிக்க வேண்டும் என பெயர் குறிப்பிட விரும்பாத முடித்திருத்தும் கடையின் உரிமையாளர் ஒருவர் கேட்டுக்கொண்டார்.

ஆகவே, அரசாங்கம் இதற்கான ஒரு சிறந்த நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று அவர் மேலும் கேட்டுக் கொண்டார்.

### தங்க விலை நேற்றைய நிலவரம்

பவுன் (916) = 1 கிராம் = ரிம. 244.00

தகவல்
தேவன் ஜுவல்லர்ஸ்
பினாங்கு, பட்டர்வொர்த், கூலிம் & நிபோங் திபால்

### அந்நிய நாணய நிலவரம்

| நாணய விவரம் | விற்கும் விலை | வாங்கும் விலை |
|---|---|---|
| 1 அமெரிக்க டாலர் | 4.2600 | 4.2169 |
| 1 ஆஸ்திரேலிய டாலர் | 3.1380 | 3.1059 |
| 1 சிங்கப்பூர் டாலர் | 3.1380 | 3.1149 |
| ஸ்ரீ லங்கா ரூபா (100) | 2.1885 | 1.2097 |
| 1 பவுன் லண்டன் | 5.8400 | 5.8300 |
| இந்திய ரூபாய் (100) | 6.2300 | 6.0000 |

### சுறுசுறுப்பாக இயங்கிய ஐந்து பங்குகள்

| பங்கு | விற்கும் விலை | வாங்கும் விலை |
|---|---|---|
| GENETEC | 23.30 | 23.16 |
| TOCEAN | 4.10 | 4.08 |
| HSI-CIG | 0.80 | 0.76 |
| HSI-CIV | 0.83 | 0.72 |
| TAFI | 1.88 | 1.87 |
| HSI-CIL | 0.67 | 0.60 |